# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 28 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 28


## பிசாசானவன், ஒரு கெர்ச்சிக்கிற சிங்கம்

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்... 1 பேது 5 : 8.

1898 ஆம் ஆண்டு கென்யாவிலிருந்து உகாண்டாவுக்கு ரெயில் தண்டவாளம் அமைக்கும் பணிகள் பள்ளத்தாக்குப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.ஏராளமான தங்கும் முகாம்களும் அமைக்கப்பட்டிருந்தது. பணியாளர்களில் பலர் தொடர்ந்து காணாமல் போய்க் கொண்டிருந்தனர். உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது திடுக்கிடும் தகவல் வெளியானது.

மனிதர்களை உட்கொள்ளும் இரண்டு சாவோ  வகை சிங்கங்கள் அங்கே இருப்பது தெரியவந்தது.ஒன்பது மாதங்களாக பலரது உயிரைக் கொன்று, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் மனதில் பயத்தை ஏற்படுத்தி, கொடூரமான அழிவை ஏற்படுத்தியது. அதாவது அவர்கள் தங்கியிருக்கும் கூடாரங்களுக்குள் புகுந்து, அவர்களை பலவந்தமாய் இழுத்துக்கொண்டு ரெயில் தண்டவாளங்கள் வழியாக கொண்டு போய் கொன்று, மாமிசத்தைத் தின்று போட்டது. அதனைப் பிடிப்பதற்கென்று வைக்கப்பட்ட பொறிகளிலும் விழவில்லை. ஆகவே பணியாளர்கள் தங்கள் இருப்பிடங்களைச் சுற்றி முள்வேலி அமைத்தும் அக்கினி ஏற்றியும் அதனிடமிருந்து தப்பிக்க வழிவகைகளைத் துரிதமாய் தேடி மேற்கொண்டனர். ஆயினும் அமைக்கப்பட்ட முள்வேலிகளுக்குள் புகுந்தும் அதனை தாண்டி குதித்தும் மிக ஆக்ரோசமாக மீண்டும் மீண்டும் வந்து மனிதர்களை சூறையாடினது. அவர்களை கடித்து இழுத்து புதர்களுக்குள்ளே கொண்டு போய் எலும்புகளை நொறுக்கி கொன்று தின்றது. இருளில் நடக்கிற பயங்கரத்தை எண்ணிப் பாருங்கள். புதர்களின் நடுவே மறைந்து  பதிவிருக்கிற சிங்கங்கள் நம் அருகில் இருக்கும் பயங்கரம் இப்படிப்பட்டது.

கெர்ச்சிக்கிற சிங்கத்தின் குரலானது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும், வேறு பல இடங்களுக்கும் இதே, சாத்தான் வருகிறான் விழித்திருங்கள் சகோதரரே! என்று தொனித்துக் கொண்டேயிருந்தது.ஒரு சில பேரே மிஞ்சி, பல பணியாளர்களது வாழ்க்கை அழிந்தபிறகே, ஒவ்வொரு சிங்கமும் இறந்து போனது.

அப்போஸ்தலனாகிய பேதுரு அந்த கெர்ச்சிக்கிற சிங்கத்தைக்கொண்டு விழிப்பாயும், தெளிந்த புத்தியுள்ளவர்களாயுமிருங்கள் என்று அறிவுறுத்துகிறார்.சாவோ சிங்கங்களைப் போலவே எதிரியான பிசாசு கிறிஸ்தவர்களின் மத்தியிலே அலைந்து திரிந்து அவர்களை கொல்லவும், திருடவும், அழிக்கவுமே வகைதேடுகிறான்.

அவ்வாறு அந்தரங்கமான கிரியையை நடப்பிக்கிற தந்திரமான பிசாசானவன் செயல்படும் இடங்களை தெரிந்துகொண்டு விழிப்பாயிருங்கள்.அவன் நம்முடைய சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் குலைத்துப்போடுவான். நமக்கு பக்கபலமாய் இருக்கிற தேவபிள்ளைகளுடைய ஐக்கியத்தினின்று நம்மை தனிமைப்படுத்தவே அவன் எத்தனம் பண்ணுகிறான்.

பரிசுத்தமான தேவஜனங்களின் வாழ்வை சிதைக்கும்படியாகவே போராடுகிறான். ஆவிக்குரிய போராட்டத்தில் அவன் குறி வைப்பது தேவபிள்ளைகளை மாத்திரமே. எதிரியான பிசாசு தேவனுக்கு கீழ்ப்படிகிற வர்களின் வாழ்வை கெடுக்க துணிகிறான். திருமணப் பந்தங்களிலும், குடும்பங்களுக் குள்ளும், சபை ஐக்கியங்களிலும் குழப்பத்தை உண்டாக்கும். நம் ஆவிக்குரிய கண்களை திறந்து பார்த்து உண்மையான எதிரி யார்



**“ எதிரியான பிசாசு கிறிஸ்தவர்களின் மத்தியிலே அலைந்து திரிந்து அவர்களை கொல்லவும், திருடவும், அழிக்கவுமே வகைதேடுகிறான்.”**


| பிசாசானவன், ஒரு கெர்ச்சிக்கிற சிங்கம் | தலையங்கம் | ஒருநோக்கு செய்தி<br>நித்திய பாதுகாப்பு | நித்திய பாதுகாப்பு<br>பக்கம் 5 – 6<br>கேள்விக்கு என்ன பதில்? | உங்களுக்குத் தெரியுமா?<br>ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| --- | --- | --- | --- | --- |
| பக்கம் - 1 | பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்,

## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28 ,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

என உணர்ந்து கொள்வோம்.இது தூங்குகிற நேரம் அல்ல.உபவாசத்தோடு தரித்து நின்று சாபப்பிசாசை எதிர்ப்போம்.ஜெயிப்போம்.இயேசு தம் சீஷர்களிடம் நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான்; மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்(மத் 26 : 41).



இந்த பூமியில் வாழுகின்ற நாம் மாம்சத்திற்குரியவர்களான படியால், சோதனைக் குட்படலாம். ஏனெனில் நாம் இருப்பது பரலோகம் அல்ல ஆகையால் விழித்திருந்து ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம்.எதிரியான பிசாசானவனை ஜெயிக்கும் ஒரே ஆயுதம் ஜெபம் மட்டுமே. பெலவீனமுள்ள மாம்சத்தைக் கொண்டு நம்மை நம்மால் எதிரியான சாபப்பிசாசிடமிருந்து பாதுகாக்க முடியாது. தேவனுடைய வல்லமையும், அவருடைய கிருபையுமே தொடர்ந்து நம்மைப் பாதுகாக்கும்.இயேசு பேதுருவிடம் லூக் 22 : 31-32 வசனங்களிலே சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு

**இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டு கொண்டான்.**

உத்தரவு கேட்டு கொண்டான்.நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.இன்றும் கூட சாத்தான் இவ்விதமாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் ( யோவான் 4 : 4).அனுதினமும் அவர் பாதத்தில் அமர்ந்திருக்கும்போது அவருடைய வல்லமையால் சாத்தானை மேற்கொள்ள பெலன் தருவார். வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் எடுக்கும் தீர்மானங்களிலும், முடிவுகளிலும் விழிப்பாயும், கவனமாயும் செயல்பட வேண்டும். தீயவழியில் நடவாமல் ஞானமாய் நடக்ககடவோம்.தேவனோடு உள்ள ஐக்கியத்தை அதிகமாக்கி கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தையின் வெளிச்சமானது பிசாசானவனிடமிருந்து நம்மைப் பாதுகாக்கும்.சாத்தான் கொண்டுவரும் ஒவ்வொரு சோதனையின் பள்ளத்தாக்கிலும், அதைக் கடந்து தப்பித்துச் செல்லக்கூடியதான போக்கையும் வரவிடுவார்.நாம் கவனமாய் நடந்துகொள்ளும்போது, எதிரியானவனைக் குறித்த எந்த பயமும் இல்லை.இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது (லூக் 10 : 17 -19).இயேசுகிறிஸ்துவை நீங்கள் பூரணமாய் விசுவாசிக்கும்போதுதான் சாத்தானை மேற்கொள்ளமுடியும்.இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே மீட்கப்பட்ட நாம் பரலோகத்தின் வாசலை சென்றடைய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொள்வோம்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்... நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் – எபி 4 : 9 – 11.

இந்த இதழில் நித்திய பாதுபாப்பு (அ) ஒருமுறை மீட்கப்பட்டோர் என்றுமே மீட்கப்பட்டோர். கால்வினிசம் என்கிற கோட்பாட்டின் முதன்மையான ஒரு காரியம் இது. அதற்கு எதிர்மாறானது அர்மினியனிசம். இந்த இருவிதமான இறையியல் கொள்கைகளும் இறையாண்மை ஒழுக்கக்கேடு, பிராயச்சித்தம், விடாமுயற்சி, ஒருமித்த தன்மை ஆகிய கொள்கைகளின் கருத்துகளில் வேறுபடுகிறது. ஒன்றையொன்று சார்ந்ததும் கூட. இந்த எல்லா கொள்கைகளையும் எழுத இடம் போதாது ஆகவே நேரடியாக சுருக்கமாக விவாதிக்கலாம். பொதுவாக கால்வினிச கொள்கையைவிட அர்மினியனிசமே சிறந்தது மேலும் ஒரு குறிப்பிட்ட கொள்கை சார்ந்து நாம் தீர்மானிக்காமல், வேத சத்தியத்தை மாத்திரமே ஆதாரமாக கொள்வோம். ஒரு சில உண்மைகளைத் தவிர்ப்பதால்தான் இருவேறு கொள்கைகளே தோன்றுகிறது.

ஒரு முறை மீட்கப்பட்டோர் என்றுமே காக்கப்பட்டோர் என்பது தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து அல்ல, மாறாக மனுஷர்களின் தவறான புரிதலினால் ஏற்பட்டதே . கிருபை என்கிற குடையால் மறைக்கப்பட்டு, பாவம் உட்புக வழிவகுக்கும் மிக மோசமான ஒரு தந்திரம் இந்த கொள்கை. இது நேரடியாக சொல்லப்படவில்லை. உங்களுடைய பாவங்களே தேவனுக்கும் உங்களுக்கும் பிரிவினையை உண்டாக்குகிறது. அவர் பரிசுத்தமுள்ள தேவன். நாம் கவனமாய் இருக்காவிடில், பிரிவினையை தூண்டுகிற கருத்துக்களையுடைய மனுஷர்கள் தங்களுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காக தேவசபையிலே தோன்றிவிடுகிறார்கள். நம்முடைய நற்கிரியைகள் உண்மையான இரட்சிப்பின் வெளிப்பாடே அல்லாமல் அதினிமித்தம் இரட்சிப்பு என்றுமே நிலைநிற்கும் என்று சொல்லிவிட முடியாது. இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலும், விலையேறப்பெற்ற அவருடைய இரத்தத்தினாலும் மீட்கப்பட்டிருக்கிறோம்.தேவன் நம்மை மீட்படையச் செய்யவே சித்தமாயிருக்கிறாரே தவிர புறம்பே தள்ளிவிட அல்ல.சுயநீதியை மேன்மையாக சொல்கிற மனுஷர்களே இதுமாதிரியான கொள்கைகளை உடையவர்கள்.

இரட்சிப்பு என்பது பாவத்தின் வல்லமையினின்று நம்மை விடுதலையாக்கும் தேவனுடைய கிரியை. நித்திய பாதுகாப்பைக் குறித்து போதிப்பவர்கள் கூறுவது யாதெனில் இதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்களோ, அவர்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையையும், கர்த்தருடைய கிருபையையும் எண்ணாதே போகிறார்கள். இரட்சிப்படைந்த பின் மறுதலித்துப் போய் பாவத்திலே விழுகிறவர்கள்தானே அப்படிப்பட்டவர்கள். மிகச்சிறந்தது யாதெனில் தேவனுடைய இரத்தத்தின் வல்லமையையும், கிருபையையும் காத்துக்கொள்வது தான். தொடர்ந்து பாவம்செய்து அதை இழந்து போவது அல்ல.அவருடைய கிருபையினாலே தேவவசனத்துக்கு அனுதினமும் கீழ்படிந்து விசுவாசத்தைக் காத்துக்கொள்வதே நம்முடைய வேலை.

தேவனோடு உள்ள ஐக்கியத்தை அனுதினமும் காத்துக் கொள்ளாதோர் விசுவாசத்தையும், நித்திய வாழ்வையும் இழக்க நேரிடும்.ஆகவே நித்திய மீட்பு என்பது தவறான வழிநடத்துதல். தேவனுடைய கிருபையிலும் அன்பிலும் நான் பூரணமாய் நிலைத்திருக்க தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். உலகத்தின் ஆஸ்திகளுக்கெல்லாம் மேலான விசுவாச வாழ்க்கையை காத்துக்கொள்வோம்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

# வேதபாட வழிகாட்டி

## நித்திய பாதுகாப்பு

**வேத வாசிப்பு :** விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம் – எபி 10 : 38-39

**செய்திச் சுருக்கம் :** நித்திய பாதுகாப்பு (பரிசுத்தவான்களின் இடைவிடாத பிரயாசம் என்று கால்வின் இறையியலிலும், பொதுவாக இரட்சிக்கப்பட்டோர் எப்போதும் மீட்கப்பட்டோரே).இந்த சாராம்சத்தில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டுவிட்டால்,அதாவது மறுபடி பிறந்துவிட்டால் திரும்ப பழைய நிலைக்குச் செல்லமாட்டார்கள் என்பது ஒரு கொள்கை. இதன் நோக்கம் ஒருவர்இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்பட்டால் அவர் என்றென்றும் நிலைத்திருக்கப்பண்ணும் நித்திய பாதுகாப்பைத் தருவார்

**வரையறை :** ஒரு தனிமனிதனுடைய இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையால்தான்.மாறாக நற்கிரியைகளால் அல்ல. அதுவே பரிசுத்த வாழ்வைத் தரும். விசுவாசத்தின் உடன்படிக்கை. ஆகவே ஒருவர் அந்த விசுவாச உடன்படிக்கையை மீறினால் இரட்சிப்பை இழந்து போக நேரிடும்.ஒருமுறை இரட்சிக்கப்பட்டோர் என்றென்றும் மீட்கப்பட்டோரே என்பது இறையியல் முரண்பாடு.ஒருவர் கிறிஸ்துவோடு விசுவாசத்தில் நிலைத்திருந்தால் மாத்திரமே இரட்சிப்பை நித்தியமாக சுதந்தரித்துக் கொள்ள முடியும்

**I.கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுதல்**

A. எபே 2: 8-9 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் (ரோமர் 5 : 1)

B. எபி 7 : 25 முற்றுமுடிய இரட்சிக்க வல்லவர்

C. 2 கொரி 5 : 17 எல்லாம் புதிதாயின

**II.நித்திய ஜீவன் - தேவன் தந்த ஈவு**

A. யோவான் 5 : 24 என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு (1 யோவா 5 : 11-13)

B. யோவான் 6 : 37-40 என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை

C. ரோமர் 6 : 20-23 பாவத்தின் சம்பளம் மரணம்.கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்

**III. கிறிஸ்துவில் அடைக்கலம்**

A. யோவான் 10 : 27-29 கிறிஸ்துவினுடைய ஆடுகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை

B. ரோமர் 8: 35-39 கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?

**IV.வழுவாமல் காப்பவர்**

A. யூதா 1 : 24 வழுவாதபடி உங்களைக் காக்கவும் (1 பேது 1 : 5)

B. 2 கொரி 1 : 22 அவர் நம்மை முத்திரித்து (எபே 4 : 30)

C. 1 கொரி 1 : 8-9 முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்

D. பிலி 1 : 6 என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்

**V.ஆவிக்குரிய ஐக்கியத்தின் வெளிப்பாடு**

யோவான் 15 : 1-11 நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

**VI.பரிசுத்தமாகுங்கள்**

A. 1 கொரி 6 : 9-11 அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை

B. எபி 12 : 14-15 பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே

C. 1 யோவான் 1 : 6 நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால்... பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்

**VII.இரட்சிப்பை இழந்துபோகிறவர்களின் நிலை**

A. மத் 13 : 3-9 விதைக்கிறவனைக் குறித்த உவமை

B. 1 தீமோ 4 : 1 சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் (அப்போ 20 : 28-30)

C. கலா 5 :1,4 கிருபையினின்று விழுந்தீர்கள்

D. 1 தீமோ 6: 9-11 விசுவாசத்தை விட்டு வழுவி

E. எபி 3 : 12-14 ஜீவனுள்ள தேவனை விட்டு விலகு

F. 2 யோவான் 1 : 8-9 உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல்

G. வெளி 3 : 3-6 தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் உண்டு

H. 2 பேது 2 : 20-22 உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால்

I. 1 கொரி 3: 16-17 ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்.

பார்க்க : 1 கொரி 9 : 27, 2 பேது 3 : 17, ரோமர் 11 : 21-23, 2 தீமோ 2 : 17-19

**VIII.விசுவாசத்திற்கேதுவான புத்திமதி**

A. கொலோ 1 :21-23 நம்பிக்கையை விட்டு அசையாமல்

B. 1 கொரி 15 : 58 நீங்கள் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக

C. எபி 4 : 14 நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம் (எபி 3 : 14)

D. 1 தீமோ 6 : 12 நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்

**முடிவு :** நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் – வெளி 2 : 10.



# வேதாகம சத்தியம் நித்திய பாதுகாப்பு ஒத்துப் போகாத தன்மை

**கிறிஸ்தவ உலகில் இந்த நித்திய பாதுகாப்பைக் குறித்து பல பிரிவுகள் உண்டு. ஒருவர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின், பாவம் செய்வாராகில் இரட்சிப்பை இழக்கவோ அல்லது நித்திய பாதுகாப்புடன் அழிவில்லா ஈவை பெற்றவராகவே கருதப்படுவாரா?**

**நம்முடைய சுயகிரியைகளினால் நாம் சம்பாதித்தது அல்ல. தேவனோடு உள்ள ஐக்கியத்தை புதுப்பித்துக் கொள்ளும் தருணம் இந்த கிருபையின் நாட்கள்.**

**இரட்சிப்பின் திட்டம்**

நித்திய பாதுகாப்பைக் குறித்து அநேக கேள்விகளும், பல இறையியல் கொள்கைகளைப் பாதிக்கும் பதில்களும் உண்டு. இறையிய லாளர்களுக்கிடையில் பல கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் முற்றிலும் வேறுபட்ட கண்ணோட்டங்கள் வேதாகம கோட்பாடுகளுக்கு எதிர்மறையாக இருப்பதில்லை. வேதாகமம் முழுமையாக நமக்கு போதிப்பது தேவனுக்கும் மனிதனுக்குமான விசுவாச உடன்படிக்கை.தேவன் தம்முடைய ஜனங்கள்மேல் வைத்திருக்கிற பற்றுதலோடு, அவருடைய ஐக்கியத்திலே பரிபூரணப்படும்படியாக நாமும் முந்தி அவரில் அன்புகூரக் கடவோம்.விசுவாசி தேவன் தனக்கு கொடுத்த பலத்தால் பாவத்தை மேற்கொண்டு விசுவாசத்தைவிட்டு வழுவாமல் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

விசுவாசியானவர் இரட்சிப்பை இழந்து போவதற்கு தேவசித்தமின்றி அவரவர் எடுக்கும் மாம்சீகமான முடிவே காரணம் ஆகும்.


**தவறான கொள்கை தொடர்ந்து பாவம் செய்ய தூண்டும்**

நித்திய பாதுகாப்பு என்பது இரட்சிக்கப் பட்டோர் எப்போதும் இரட்சிக்கப் பட்டோரே. இதனால் இரட்சிக்கப்பட்டோர் பாவம் செய்ய ஏதுவாகிறது.மேலும் பெயரளவிலான இரட்சிப்பும் ஒருவர் பின்மாற்றத்தினால் தேவனைவிட்டு விலகி பாவம் செய்வாரானால் எப்படி இரட்சிப்பை காத்துக் கொள்ள முடியும். ஆகவே இந்த கோட்பாடு எப்படி சரியானதாக இருக்க முடியும்.ஆகவே நித்திய பாதுகாப்பு முரண்பாடு உடைய தாயினும் ஆதரவான பல உண்மைகளும் போதிக்கப்படுகிறது. ஆகவே உணமைகளை புறக்கணித்து, தவறான போதனைகளால் வளர்ந்து விடாதீர்கள்.

**கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள், உங்கள் கிரியைகளால் அல்ல**

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசி 2 : 8-9). தேவனால் அருளப்பட்டதே இரட்சிப்பு.நம்முடைய கிரியைகளால் உண்டானதல்ல. ஒருவர் முழுமையான நம்பிக்கையை தேவன்மேல் வைக்கும்போது, அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயு மிருக்கிறார் (எபி 7 : 25).தேவனுடைய கிருபையின் ஈவினால் மாத்திரமே நாம் வாழ்கிறோமே தவிர நம்முடைய நற்கிரியைகளின் நிமித்தமல்ல.இந்த வேதவசனங்கள் நமக்கு கூறுவது நித்திய பாதுகாப்பு என்றாலும் இரட்சிக்கப்படுதல் என்பது தேவனுடைய கிருபையினாலே நமக்கு கிடைத்த ஈவு. நம்முடைய சுயகிரியைகளினால் நாம் சம்பாதித்தது அல்ல. தேவனோடு உள்ள ஐக்கியத்தை புதுப்பித்துக் கொள்ளும் தருணம் இந்த கிருபையின் நாட்கள்.

யோவான் 6 : 37-40 என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும் அவருடைய சித்தமாயிருக்கிறது. தோல்வியற்ற விசுவாசத்தைக் குறித்துப் பேசவில்லை மாறாக அவர் நம்மேல் வைத்த கிருபையினால் ஈவாக கிடைத்த நித்திய வாழ்வின் மேன்மையைக் குறித்து கூறப்பட்டுள்ளது. அதே அதிகாரத்தில் இயேசுவோடு இருந்த சீஷர்களும் கூட பின்வாங்கிப் போனதை பார்க்க முடிகிறது. அதே போலதான் இன்றும் கூட ஜனங்கள் தேவனைவிட்டு விலகி நடப்பதால் இரட்சிப்பை இழந்து போகிறார்கள். யோவான் 10 : 27 - 29, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என் ஆடுகளுக்கு நித்திய ஜீவனை கொடுக்கிறேன் என்கிறார். மேலும் அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.



**ஒரு விசுவாசி தேவனோடு உள்ள உறவில் நிலைத்திராவிட்டால், நித்திய ஜீவனுக்குப் பதிலாக நித்திய நித்தியமான அழிவையே சம்பாதிக்க நேரிடும்.**

அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது. என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது (27) இந்த ஆடுகள் தன்னிச்சையாக இயேசுவை பின்பற்றியிருந்தால் துன்பமோ, வியாகுலமோ வரும் போது பிதாவினுடைய கரத்தினின்று பிரிந்து போகக்கூடும். ஆனால் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார் (ரோமர் 8 : 35 -39) என்று வேதம் கூறுகிறது திருப்பி அளிக்கப்பட்ட அன்பின் ஐக்கியத்தை காத்துக் கொள்வது நம்முடைய கடமை ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6 : 23).

**வழுவாதபடி நம்மைக் காக்கும் தேவன்**

அநேக வேதாகம வசனங்கள் தேவனுடைய மகத்துவத்தையும் விசுவாசத்தையும் நமக்கு அறிவுறுத்துகிறது. வழுவாதபடி நம்மைக் காக்கிறவர் அவர் (யூதா 1 : 24). அவர் நம்மை முத்திரித்திருக்கிறார் (2 கொரி 1 : 22). தேவனோடு உள்ள உறவிலே நாம் பெலப்படும் போதுதான், தேவன் தம்முடையவர்களை உலகத்தின் தீங்கினின்று விடுவிக்கிறார். யோவான் 15 : 1 – 11ல் இயேசு தம்மை மெய்யான திராட்சசெடியாகவும், நம்மை கொடிகளாகவும் உவமையாகக் கூறியிருக்கிறார். கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் ஆகவே அவரோடு நாம் நிலைத்திருந்தால் மாத்திரமே மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும். நாம் அவரில் நிலைத்திரா விட்டால் எறியுண்டு உலர்ந்து போகக்கூடும். எல்லா நன்மையான ஈவும் அவரிடத்திலிருந்து வந்து அவருக்குள் நிலைத்திருக்கிறவர்களுக்கே கிடைக்கும். அவராலேயன்றி நம்மால் ஒன்றும் செய்யக்கூடாது ஒரு விசுவாசி தேவனோடு உள்ள உறவில் நிலைத்திராவிட்டால், நித்திய ஜீவனுக்குப் பதிலாக நித்திய நித்தியமான அழிவையே சம்பாதிக்க நேரிடும்.

வேதம் தெளிவாக நமக்கு சொல்லுகிறது அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (1 கொரி 6 : 9 -11) .ஒருவர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு, தேவனோடு உள்ள விசுவாச வாழ்க்கையில் வளர்ந்து, இரட்சிக்கப்பட்டு, பின்பு பின் மாற்றம் அடைந்து மாம்சீக ஜீவியத்தின் பின் செல்வார்களாகில், ஆவிக்குரிய இழப்பை சந்திக்க நேரிடும்.எபி 12 : 14 சொல்கிறது பரிசுத்த மில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்ப தில்லையே.பரிசுத்தமானது தேவனிடத்திலிருந்து வருகிறபடியால், நாம் தேவனோடு உள்ள உறவினின்று கைவிடப்பட்டால், நம்மிடத்திலே பரிசுத்தம் இருக்காது.ஆகவே பிதாவாகிய தேவனை தரிசிக்கமுடியாது. (15) வது வசனம் சொல்கிறது ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக் குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.தேவன் நம்மேல் வைத்த மிகுந்த கிருபையை சிந்தித்து ஏற்றுக்கொள்ளும் விசுவாசியே கலக்கங்களிலும், தோல்விகளி னின்றும் காக்கப்படுவார். ஆகவே நித்திய பாதுகாப்பு என்பது தேவனில் நிலைத்திருக்கிறவர்களுக்கு மட்டுமே.

**சீர்கேடுகளுக்கெதிரான எச்சரிக்கைள்**

புதிய ஏற்பாட்டின் அநேக வேதாகம வசனங்கள் இரட்சிப்பைக் குறித்தும், பின்வாங்கிப்போகிற வாழ்வைக் குறித்தும் உவமைகளாக கூறப்பட்டுள்ளது. மத் 13 : 3-9 ல் விதைக்கிற வனுடைய உவமையினின்று ஒருதரப்பு ஜனங்கள் கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவர்களாய் இருக்கிறபடியால் வசனத்தைக் கேட்டவுடன் ஏற்றுக்கொண்டு, தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சகால மாத்திரம் நிலைத்திருப்பார்கள்.உபத்திரவமும், துன்பமும் வந்தவுடனே இடறலடைவார்கள். 1 தீமோ 4 : 1 ல் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. கலா 5 : 1 கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்.

நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபை யினின்று விழுந்தீர்கள் (4). 1 தீமோ 6 : 9-11 லே விசுவாசத்தை விட்டு வழுவப் போகிறவர்களைக் குறித்தும் எபி 3 : 12-14 பரிசுத்தவான் களுக்கான புத்திமதியும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. நீங்கள் தேவனுடைய ஆலயமாயி ருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம் (1 கொரி 3 : 16-17).கர்த்தராகிய தேவன் தம் ஜனத்தாருக்கு மனந்திரும்பும் படியான தருணங்களை எத்தனையோ முறை கிருபையாய் கொடுத்திருக்கிறார்.
2 பேது 2: 20-22 சொல்கிறது அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையைவிட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

**நம்பிக்கையை விட்டு அசையாதிருங்கள்**

இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் சிலசமயம் தங்களுடைய விசுவாசத்தை விட்டு வழுவி, பின்வாங்கிப் போகும் சூழ்நிலை ஏற்படும். ஆகவேதான் அப்போஸ்தலர்கள் தொடர்ந்து பரிசுத்தவான்கள் அசையாதபடி நிலைகொண்டி ருக்கும்படியாக, நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும் (கொலோ 1 : 21-23) .நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1 கொரி 15 : 58) .விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு; நித்திய ஜீவனைப் பற்றிக்கொள் (1 தீமோ 6 : 12).

நித்திய பாதுகாப்பு என்பது தேவனுடைய சத்திய வார்த்தைக்கு கீழ்ப்பட்டதே.தேவ வல்லமை யினால் மாத்திரமே நாம் பாவமின்றி பரிசுத்தமாய் வாழ முடியும். நாம் விழித்தி ருப்போம். நம்முடைய சொந்த பலத்தை மாத்திரம் நம்பாமல், பரிசுத்த தேவனின் இரத்தத்தால் இன்னும் நாம் பரிசுத்தமாக தேவாதி தேவனை சேவிப்போம். தேவன் தந்த பரிசுத்தவாழ்வு நம்மை எல்லா தீங்கினின்றும் விலக்கி பாதுகாக்கும்.

# கேள்விக்கு என்ன பதில்?

**எபி 6 : 4-6 , எபி 10 : 26-29 படி சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, பின்மாறிப் போனால், மனந்திரும்புகிறதற் கேதுவாய், மறுபடியும் புதுப்பிக்க கூடுமோ?**

ஆம், பின்வாங்கிப் போனவர்கள் திரும்பவும் இரட்சிக்கப்பட முடியும். ஏனெனில் சுவிசேஷத்தின் அடிப்படையே தேவனுடைய அநாதி அன்பு. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங் களையும் நீக்கும். 2 பேது 3 : 9 சொல்கிறது ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார்.எந்த ஒரு ஆத்துமாவும் வீணாய் போவதை அவர் விரும்புகி றதில்லை. தம் வல்லமையால் எல்லோரையும் தம்மண்டை சேர்த்துக் கொள்ளவே அவர் விரும்புகிறார். வெளி 22 : 17 ல் அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்.

கேட்கிறவனும் வா என்பானாக. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் ; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன். வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வுக்கான கிருபை நமக்கு அளிக்கப்பட்டுள்ளதால் பாவத்தினால் இழந்துபோன இரட்சிப்பை மீண்டும் தேவன் நமக்குத் தருவார். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, மனந்திரும்பும்போது எல்லோரும் மீட்கப்படுவது சாத்தியமே.

எபி 6 : 4-6 மற்றும் எபி 10 : 26-29 ல் சொல்லப்பட்டுள்ள உண்மையைக் கூறுவோம். இந்த இரு வசனங்களும் ஒரே மாதிரியான அர்த்தத்தையே தருகிறது. எபி 6 : 4-6 ல் : ஏனெனில் ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்தஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தை யையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்து கிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். முழுமையாக, மனப் பூர்வமாய் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தோடு கூடிய கிருபையை இழந்துபோனால் திரும்ப புதுப்பிக்க கூடாத மனந்திரும்புதல் அது.அப்படியானால் நாம் இயேசுவை திரும்ப சிலுவையில் அறைவதற்கு சமம்.இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை மறுதலிக்கிற ஜனங்கள் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்? மறுதலித்துப் போனவர்கள் மனந்திரும்புகிறதை புதுப்பிக்கிறது கடினம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துவதை விட்டு விட்டு தூஷிக்கப்படலாகாது.பின்வாங்கிப் போகிறவர்களுக்கு மாத்திரமல்ல. கிறிஸ்துவையும் அவருடைய அபிஷேக வல்லமையையும் மறுதலித்தவர்களுக்கு பொருந்தும்.



அதேபோல எபி 10 : 26 சொல்கிறது, சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களி னிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், இதே கருத்தையே உணர்த்தும் வேதவசனம் இது.ஆகவே பின்வாங்கி போனவர்களுக்கு வேறு வழி இல்லை. மோசேயினுடைய பிரமாணத்தை தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு, மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே. தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவா னாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் (எபி 10 : 28-29). இவைகள் நம்மை தெளிவுபடுத்துகிறது.

இயேசுகிறிஸ்துவின் இரத்தமே அல்லாமல் வேறே பலி இல்லை.பழுதற்ற பரிசுத்த பலி ஏற்றுக்கொள்ளப்படாவிடில், நாம் செய்கிற குற்றங்களுக்கான ஆக்கினைத்தீர்ப்பே தவிர வேறொரு பலி இனிமேல் சிந்தப்படலாகாது. ஆகவே இரட்சிக்கப்பட்டு மறுதலித்துப் போகிறவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு. இரட்சிக்கப்பட்டு பின்வாங்கியவர்களுக்கு எக்காலத்திலும் மீட்பு இல்லை என்று பரிசுத்த வேதாகமம் கூறவில்லை. மாறாக மறுதலிக்கும் முன் ஒருவிசை தேவாதி தேவன் இயேசுகிறிஸ்து நமக்காக சிந்திய இரத்தத்தின் உடன் படிக்கையை மறந்து போய் விடக் கூடாது.

நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (அப்போ 4 : 12).தேவனுடைய அநாதி இரக்கங்களினாலும், கிருபையினாலும் மனுஷனுடைய மனமும், இருதயமும் புதிதாக்கப்படும்போது அவர் மீண்டும் நம்மேல் இரக்கமாயிருப்பார்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**



உங்களுக்குத் தெரியுமா?

*77% பேர் நற்கிரியைகளின் நிமித்தமே இரட்சிப்பு கிடைப்பதாக நம்புகிறார்கள்.*
*52% பேர் நம்முடைய நல்ல ஈகை குணத்திற்கு பரலோகத்தில் ஒரு இடமுண்டு என்போர்.*
*60% பேர் இயேசுகிறிஸ்து நமக்காக சிலுவையில் அறையப்பட்டு பலியானதே நம் பாவங்களை நிவிர்த்தியாக்கும் என்கின்றனர்.*

த ஸ்டேட் ஆப் அமெரிக்கன் தியாலஜி, ரீசேர்ச் – 2016

*65% பேர் எல்லா பிரிவு கிறிஸ்தவர்களும் நம்புவது பரலோகம் செல்ல அநேக வழிகள் உண்டு என்கின்றனர்*
U.S. ரிலிஜியஸ் லேண்ட்ஸ்கேப் ஸ்டடி, ரீசேர்ஜ் 2014

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## ஊழியக்காரரின் மனைவி

இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள் என்றாள் – 1சாமு 25 : 41.



தாவீது, அபிகாயிலை விவாகம் பண்ண மனதாய் எங்களை உன்னிடத்தில் அனுப்பினார் என்று அவளோடே சொன்ன போது, தாவீதினுடைய ஊழியக்காரரின் கால்களைக் கூட கழுவத்தக்க பணிவிடைக்காரியாகக் கூட தயாராய் இருந்த அபிகாயிலின் குணாதிசயங்களை காண முடிகிறது. இன்றும் அநேக அபிகாயில்களாக ஊழியக்காரரின் மனைவிகள் தங்களுடைய வாழ்விலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். எந்த ஒரு அங்கிகாரமும், பலனும் எதிர்பார்ப்புமின்றி தங்களை சுற்றியுள்ள ஜனங்களுக்கு ஆதரவளிக்கின்றனர் ஆகவே அவர்கள் கனம் பண்ணப்பட வேண்டியவர்கள்.

ஊழியக்காரரின் மனைவி எல்லாவற்றிலும் பிறருக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். முகத்தில் புன்சிரிப்போடும், தம் குழந்தைகளை வளர்ப்பதிலும் அவர்கள் மற்றவரிடத்தில் பழகும் முறைகளிலும் முன்மாதிரியாக வளர்க்கப்படும்படியாக கவனமாக செயல்பட வேண்டும். ஊழியத்திட்டங்களை வரையறுத்தலிலும், மாற்றி அமைத்தலிலும் துடிப்புடன் செயல்பட வேண்டும். ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை, மனிதநேயமும், சொந்த போராட்டங்கள் விருப்பு வெறுப்புகளைத் தாண்டி மகிமையுடையதாய் விளங்க வேண்டும். ஓ! இது மாதிரியான எதிர்பார்ப்புகள் ஏற்கனவே அதிக வேலைப்பளு கொண்ட தாய்மார்களுக்கு மன அழுத்தத்தை கொடுத்துவிட கூடாது.

ஊழியக்காரரின் மனைவியும் மற்றவர்களைப் போல எல்லா தேவைகளையும் கொண்ட ஒரு மனுஷீக தன்மையுடையவர்களே அவர்கள் மீன் தொட்டியில் உள்ள மீன் போல அதிக சுந்தரமில்லாதவர்களாய், தனிமை உணருகிறவர்களாயுமே காணப்படுவர் ஏனெனில் சபை அங்கத்தினர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கும் அவர்களுக்கு பொறுப்பு உள்ளது.

80% ஊழியக்காரரின் மனைவி சபைக்குழுவினரால் அங்கிகரிக்கப்படுவதில்லை. ஆயினும் நீங்கள் செய்கிற எல்லா காரியங்களுக்காகவும் தேவனை துதியுங்கள். நீங்கள் மிகச் சரியானவர்களாய் இருக்க வேண்டும். என்று எதிர்பார்க்கவில்லை உங்களுடைய மனிதநேயமும், அன்பும் எப்போதும் பாராட்டத்தக்கதே தொடர்ந்து பணியாற்றுங்கள். நாங்கள் அன்பில்லாதவர்களாய் இருந்தபோது, தேடிவந்து இரக்கம் பாராட்டினீர்கள் ஊழியக்காரரின் மனைவியாய் அவரோடு துணை நில்லுங்கள் தேவ அன்புக்கும், ஊழியத்துக்கும் நன்றி செலுத்துகிறோம் நாங்கள் உங்களை பாராட்டுவோம்.

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD Worship Place: Church Street, Kolarpatti, Pollachi-Tk - 642 107**

**தேவசபை ஆராதனை நடைபெறும் இடம் : சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth     Phone (போன்) : 9597562641**

Tamil Editor : **W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.**
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316